**25 பாலங்களின் மீள்நிர்மாண செயற்திட்டம் - 2013**

25 பாலங்களின் மீள்நிர்மாண செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு காலப்பகுதியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தினால் 2014 சனவரி 30 இல் அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் கீழ் நிதியளிக்கப்படும்.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சான தற்போதைய நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன முறையே செயற்திட்டத்தில் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களாகும். ஏழு மாகாணங்களில் பாதசாரி கரையோர நடைபாதைகளுடன் 2 வரிசையான் 25 பாலங்களை மீள்நிர்மாணம் செய்வது செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். பிரயாணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தின் அதிகரித்த தேவையை ஈடுசெய்தல் மற்றும் வாகன செயற்பாடு மற்றும் வீதி பராமரிப்பு கிரயம், பிரயாண நேரம் மற்றும் வீதி விபத்துக்கள் என்பவற்றை குறைப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்தல் என்பன செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்டவையாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் குவைத் டினார் 10 மில்லியனிற்குச் சமனான ரூபா 4,632 மில்லியனானதுடன் அரேபிய பொருளாதார விடுதிக்கான குவைத் நிதியம் முழுவதுமாக செயற்திட்டத்திற்கு நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த

முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்க

(அ) செயற்திட்டம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 3.71 மில்லியன் தொகையாகும். மீளாய்வு காலப்பகுதிக்கான செலவினத்தின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| நடைபெறும் வேலைகள் | 2.04 |
| செயற்திட்ட நிர்வாகக் கிரயம் | 1.67 |
| மொத்தம் | 3.71 |

**5. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**5.1 நிதிகளின் பயன்பாடு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு காலப்பகுதியில் நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மூலம் | வழங்குவதற்கு உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டு பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு | மீளாய்வு காலப்பகுதியில் பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | குவைத் டினார் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| கேஎவ்ஏஈடி | 10 | 4,632 | - | - | |
| இலங்கை அரசாங்கம் | - | - | 10 | 2.94 | 2.94 |
| | 10 | 4,632 | 10 | *2.94 | 2.94 |

* ஆண்டு இறுதியிலுள்ள செலுத்தப்பட வேண்டியவைகள் உள்ளடக்கப்படாமையால் இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொயையுடன் இந்தத் தொகை இணங்கவில்லை.

**5. பௌதீக செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட செயற்திட்ட முகாமைத்துவ அலகு, 3 பொதிகளின் கீழ் இந்த செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவற்கு தீர்மானிததிருந்தது. எனினும், பொதி 01 இன் கீழ் 08 பாலங்களை மீள் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தக்காரரை தெரிவு செய்வதற்கான கேள்விகள் அழைக்கப்பட்டதைத் தவிர 2014 ஆம் ஆண்டு இறுதிவரையிற் கூட செயற்திட்டத்தால் நடவடிக்கை எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைத்த தகவல்களின்படி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் பிரிவு செயற்திட்டத்தில் கீழுள்ள நிர்மாணிக்கப்பட வேண்டிய 25 பாலங்கள் பற்றி மேற்கொண்ட சாத்திய - அறிக்கைகளை விசேட செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்கு சமர்ப்பித்திருந்தது. எனினும் மேற்கொள்ளப்பட்ட சாத்தியங்கள் கற்கைகள் மேற்கொள்ளப்படாத வேறு 08 பாலங்கள் மீள் நிர்மாண நோக்கங்களிற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தன.

(இ) முழு செயற்திட்ட காலப்பகுதிக்கான ஒட்டு மொத்த செயற்திட்ட திட்டம் மற்றும் செயற்திட்ட அமுலாக்கலிற்கான ஒவ்வொரு ஆண்டிற்குமான நடவடிக்கைத் திட்டங்கள் என்பன குறித்த செயற்திட்ட காலப்பகுதிக்கிடையில் சிக்கனமாக மற்றும் வினைத்திறனான தன்மையில் செயற்திட்டத்தின் இலக்குகள் அடையப்படுவதை உறுதி செய்வதற்கு இயலக்கூடியவாறு செயற்திட்டத்தின் செயற்பாடுகளின் முதலாண்டு இறுதி வரையிலும் கூட தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.